கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2010/2011 (JULY/AUGUST - 2015)

# PHYS- **4101** – கட்டமைப்பு வாதமும் பின் நவீனத்துவமும்

# (Structuralism and Post Modernism)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் இருந்து ஏதேனும் ஒரு வினாவிற்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

## பகுதி-I

01. அ) "கட்டமைப்பு வாதம் என்பது அதிக புறவயத் தன்மை வாய்ந்ததும் விஞ்ஞானத் தன்மை வாய்ந்ததுமான அணுகுமுறையாகும்". இக்கூற்றினை விளக்குக. (09புள்ளிகள்)

ஆ) கட்டமைப்பு வாதத்திற்கு பேர்ட்டினன் டீ சசூரின் பங்களிப்புக்களை மதிப்பிடுக. (08புள்ளிகள்)

இ) "ரோலண்ட் பார்த் கட்டமைப்பு வாதியாகவும் பிறகட்டமைப்பு வாதியாகவும் இருக்கின்றார்". இக்கூற்றினை விளக்குக. (08புள்ளிகள்)

02. அ) "பிறகட்டமைப்பு வாதம் என்பது அர்த்தம் பற்றிய மெய்யியலாகும்". இக்கூற்றினை உதாரணங்களுடன் விளக்குக. (09புள்ளிகள்)

ஆ) டெரிடாவின் கட்டமைப்பு வாதத்திற்கான விமர்சனங்களை ஆராய்க. (08புள்ளிகள்)

இ) "பிறகட்டமைப்பு வாதத்தின்படி ஒவ்வொரு வாசகரும் படைப்பாளர்". இக்கூற்றினை ஆராய்க. (08புள்ளிகள்)

03. அ) டெறிடாவின் "பௌதீக அதீத இருப்புநிலை" மற்றும் "வார்த்தை மைய வாதம்" ஆகிய எண்ணக்கருக்களைத் தெளிவுபடுத்துக. (09புள்ளிகள்)

ஆ) "ஊடக மெய்மை" தற்கால சமூகத்தில் வாழ்வின் அர்த்தத்தினைத் தீர்மானிக்கின்றது என்ற போடிரியரின் (Baudrillard) கருத்தினை தெளிவுபடுத்துக. (08புள்ளிகள்)

இ) பின் நவீனத்துவ வாதிகள் பெரும் எடுத்துரைப்புக்களை விமர்சிப்பதற்கான காரணங்களை மதிப்பிடுக. (08புள்ளிகள்)

04. அ) லெவி ஸ்ட்ரோஸின் (Levi Strauss) கட்டமைப்புவாத சிந்தனையின் பிரதான பண்புகளை விளக்குக. (10புள்ளிகள்)

ஆ) லக்கானின் மெய்மை ஒழுங்கு (Real Order), கற்பனை ஒழுங்கு (Imaginary Order), குறியீட்டு ஒழுங்கு (Symbolic Logic) என்பவற்றைத் தெளிவுபடுத்துக. (15புள்ளிகள்)

## பகுதி –II

05. "நவீனத்துவத்திலிருந்து மாறுபட்டதே பின் நவீனத்துவம்". மேற்படி கூற்றினை விமர்சன ரீதியாக விளக்குக.

(25புள்ளிகள்)

06. கட்டவிழ்ப்பு வாதத்தின் பிரதான பண்புகளை விமர்சன ரீதியாக ஆராய்க. (25புள்ளிகள்)